**அ.வ.எண். 395/2022**
**பி.வா.சா.1 : இளம்பரிதி**
**தேதி : 24.02.2026**
**<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>**
**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

தாவா சொத்துக்கள் கிருஷ்ணன் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். கிருஷ்ணனுக்கு ராமசாமி என்ற ராமன், கேசவன், காளியப்பன் ஆகியோர் மகன்கள் ஆவார்கள். பாப்பாயி என்பவர் ராமசாமியின் மனைவி ஆவார். எனக்கு பாட்டி ஆவார். கிருஷ்ணன் மற்றும் காளியப்பன் ஆகிய இருவரிடம் பாப்பாயி அம்மாள் 3 ல் 1 பங்கு கிரையம் பெற்றுள்ளார். என் சித்தப்பா சங்கப்பிள்ளை கேசவன் வாரிசுகளிலிருந்து அவர்களுக்கு உரிய 3 ல் 1 பங்கு சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 ஆவணத்தின் அடிப்படையில் சங்கப்பிள்ளை கிரையம் பெற்றுள்ளார் என்று சொன்னால் என் ஆயா தான் கிரையம் பெற்றுள்ளார். சங்கப்பிள்ளை கிரையம் வாங்கிய சொத்தை பாப்பாயியம்மாள் கிரையம் பெற்றதற்கு உங்களிடம் ஆவணம் உள்ளதா என்றால் தெரியவில்லை. சங்கப்பிள்ளை மலேசியாவில் கடை வைத்து வியாபாரம் செய்தார். உங்கள் தகப்பனார் சங்கப்பிள்ளையிடம் பணம் கொடுத்து வாங்கியதற்காக ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. பாப்பாயியம்மாள் கிரையம் பெற்றதற்கு உங்கள் தகப்பனார் தான் அதற்கு பணம் கொடுத்தார் என்பதற்காக ஆவணம் உங்களிடம் உள்ளதா என்றால் ஊர்மக்கள், ஊர் தலைவருக்கு தான் தெரியும். சங்கப்பிள்ளை அவருடைய சொந்த வருமானத்தை கொண்டு தான் வா.சா.ஆ.2 ஆணத்தின் படி தாவா சொத்தில் 3 ல் 2 பங்கை வாங்கியுள்ளார் என்று சொன்னால் சங்கப்பிள்ளை மலேசியாவிற்கு சென்றுவிட்டார் ஆயா இறந்ததற்கு கூட அவர் வரவில்லை. பாப்பாயியம்மாளுக்கு நீங்கள் மருத்துவம் செய்து பராமரித்ததற்காக ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. நீங்களோ, உங்கள் சகோதரர்களோ பாப்பாயி

அம்மாளுக்கு எந்தவித நல்லது கெட்டது எதுவும் செய்யவில்லை என்றும் பாப்பாயி அம்மாளுக்கு சங்கப்பிள்ளை அவரது வாரிசுகள் தான் கவனித்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. பாப்பாயியம்மாள் மலேசியா சென்றது இல்லை. தாவா சொத்தில் 3ல் 2 பங்கு பாகம் சங்கப்பிள்ளைக்கு தனிப்பட்ட முறையில் பொதுவில் பாத்தியம் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு 1ன் கீழ் 3 பாகமும், வாதிகளுக்கு 2ன்கீழ் 3 பங்கு பாத்தியம் என்று சொன்னால் சரியல்ல. வாதி கோரியபடி தாவா சொத்து 2ன்கீழ் 3 பங்கு பாத்தியம் என்றும் வாதி கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.02.24 18:33:33 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.